


நல்லவே எண்ணல் வேண்டும்..,

எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 36 | 02.08.2025 | SATURDAY | AADI : 17 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 36 | 02.08.2025 | சனிக்கிழமை | ஆடி : 17 | விலை : ரூ.5/–

3 சென்னை விமானநிலையத்தில் 6 மாதங்களில் பயணிகளின் எண்ணிக்கை 8.23 சதவீதம் அதிகரிப்பு: விமானங்கள் எண்ணிக்கையும் கணிசமாக உயர்வு

4 பழமையான கோயில்களில் ஆகம விதிப்படி அர்ச்சகர்களை நியமிக்க வேண்டும்: ஸ்ரீ வில்லிபுத்தூர் ஜீயர் கருத்து

2 எதிர்க்கட்சிகளின் அமளியால் மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைப்பு

# செப்.9ல் குடியரசு துணைத் தலைவர் தேர்தல்: ஆணையம் அறிவிப்பு



## அடுத்த குடியரசு துணைத்தலைவர் யார்?...

புதுடெல்லி: ஆக.2-

ஜெகதீப் தன்கர் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, அடுத்த குடியரசு துணைத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் செப்டம்பர் 9 ஆம் தேதி நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிவிப்பில், குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கடைசி தேதி ஆகஸ்ட் 21 ஆகும். வாக்குப்பதிவு செப்டம்பர் 9 ஆம் தேதி நடைபெறும், அதே நாளில் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசு துணைத் தலைவராக பதவி வகித்த ஜெகதீப் தன்கர் கடந்த ஜூலை 21ஆம் தேதி தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனையடுத்து அந்த பதவி யிடம் காலியாக இருப்பதை கடந்த ஜூலை 22 வெளியிடப்பட்ட அறிவிப்பில் உள்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியது. இந்தச் சூழலில் தற்போது குடியரசு துணைத் தலைவருக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.



இணையத்தில் வாசிக்க..,

## சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணியில் தேமுதிக? முதல்வருடனான சந்திப்பு குறித்து பிரேமலதா விளக்கம்



சென்னை: ஆக.2-

முதல்வர் மு.க.ஸ்டாலினை, தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா திடீரென சந்தித்து பேசியது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் கடந்த மக்களவைத் தேர்தலின்போது அதிமுக கூட்டணியில் தேமுதிக இடம் பெற்றிருந்தது. அந்தக் கூட்டணியில் தேமுதிகவுக்கு 5 இடங்கள் வழங்கப்பட்டன. இதுதவிர ஒரு மாநிலங்களவை இடமும் வழங்கப்படுவதாக தேமுதிகவுக்கு உறுதி அளிக்கப்பட்டது.

ஆனால், கூட்டணி ஒப்பந்தத்தின்படி தேமுதிகவுக்கு மாநிலங்களவை இடத்தை அதிமுக வழங்கவில்லை. மாறாக அடுத்தாண்டு நடைபெறவுள்ள தேர்தலில் இடம் வழங்குவதாக அதிமுக அறிவித்தது. இதனால் தேமுதிக தரப்பினர் அதிருப்தி அடைந்தனர். அதைத் தொடர்ந்து, கூட்டணி நிலைப்பாட்டை ஜனவரியில் அறிவிப்போம் என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அறிவித்தார். இதன்மூலம் அதிமுக கூட்டணியில் நீடிக்கவில்லை என்பதை தேமுதிக சூசகமாக தெரிவித்தது.

அதன்பின் திமுக, தவெக கட்சிகளுடன் தேமுதிக தரப்பில் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகின. இந்நிலையில் திமுக தலைவரும், முதல்வருமான மு.க. ஸ்டாலினை சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் பிரேமலதா விஜயகாந்த் நேற்று சந்தித்து நலம் விசாரித்தார். அப்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

திமுகவுடன் கூட்டணி? பின்னர் செய்தியாளர்களிடம் பிரேமலதா கூறியதாவது: எனது திருமணம் கருணாநிதி தலைமையில்தான் நடைபெற்றது. விஜயகாந்துக்கும், கருணாநிதிக்கும் 45 ஆண்டுகால நட்பு இருந்தது. அதேபோல், முதல்வர் மு.க. ஸ்டாலினும், விஜயகாந்துடன் நட்பில் இருந்தார். விஜயகாந்துக்கு உடல்நிலை சரியில்லாத நேரத்தில் நலம் விசாரித்தார். தற்போது அவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் நட்புரீதியாக சந்தித்து நலம் விசாரித்தோம். நன்றாக இருப்பதாக கூறினார். விரைவில் குணமடைய வேண்டுமென அவருக்கு வாழ்த்து கூறிவிட்டு வந்தோம்.

இந்த சந்திப்பு 100 சதவீதம் மரியாதை நிமித்தமானது. அவர்கள் எங்கள் குடும்பத்தின் மீது வைத்த பற்றும், நாங்கள் அவர்கள் குடும்பத்தின் மீது வைத்துள்ள பற்றின் வெளிப்பாடுதான் இந்த சந்திப்பு. தேமுதிகவின் வளர்ச்சியில் நாங்கள் தற்போது முழு கவனத்தை செலுத்தி வருகிறோம். தமிழகம் முழுவதும் ஆகஸ்ட் 3ம் தேதி முதல் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறேன். கூட்டணி குறித்து தற்போது எதுவும் சொல்ல முடியாது. அதற்கான நேரம் வரும் போது உங்களிடம் அறிவிப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

முன்னோட்டமாக சந்திப்பு... இதற்கிடையே, சட்டப்பேரவைத் தேர்தலில், திமுக கூட்டணியில் சேர தேமுதிக முயற்சித்து வருவதாகவும், அதற்கு முன்னோட்டமாக முதல்வர் ஸ்டாலினை சந்தித்து தங்கள் விருப்பத்தை பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தாகவும், அதற்கு முதல்வர் ஸ்டாலின் பச்சைக்கொடி காட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இரட்டை இலக்கத்தில் சட்டப்பேரவை இடங்கள் மற்றும் ஒரு மாநிலங்களவை இடம் ஒதுக்க தேமுதிக கோரிக்கை வைத்துள்ளதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.



## அதிமுக பொதுச் செயலாளர் தேர்வு விவகாரம்: இபிஎஸ் மனு தள்ளுபடி

சென்னை: ஆக.2-

அதிமுக பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நிராகரிக்கக் கோரி, எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உரிமையியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு ஜூலை 11ம் தேதி நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி அறிவிக்கப்பட்டதை எதிர்த்தும், பொதுக்குழு தீர்மானங்களை எதிர்த்தும் திண்டுக்கல்லைச் சேர்ந்த சூர்யமூர்த்தி சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அவர் தன்னை அதிமுக உறுப்பினர் எனக் கூறியிருந்தார்.

அவர் தாக்கல் செய்த மனுவில், பொதுச் செயலாளர் அடிப்படை உறுப்பினர்களால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கை நிராகரிக்க கோரி எடப்பாடி பழனிசாமி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், சூரியமூர்த்தி, அதிமுக உறுப்பினரே அல்ல எனவும், உறுப்பினராக இல்லாத சூரியமூர்த்தி, கட்சி செயல்பாடு குறித்தும் கேள்வி எழுப்ப முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நான்காவது உதவி உரிமையியல் நீதிமன்ற நீதிபதி சிவசக்திவேல் கண்ணன், கட்சி விதிப்படி பொதுச் செயலாளர், கட்சியின் அடிப்படை உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட வேண்டும். இந்த விதிகளின்படி பொதுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என தெரிவிக்கவில்லை என்பதால், இந்த வழக்கு விசாரணைக்குரியது எனக் கூறி, சூரியமூர்த்தியின் வழக்கை நிராகரிக்கக் கோரி எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

## அரசு பள்ளிகளில் கற்பித்தல் தரத்தை மேம்படுத்த வேண்டும்: அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவுறுத்தல்



சென்னை: ஆக.2-

அரசுப் பள்ளிகளில் கற்பித்தல் தரத்தை தொடர்ந்தும் மேம்படுத்த ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும் என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்தார். சென்னை மாவட்ட அளவிலான கற்றல் அடைவுத் தேர்வு (ஸ்லாஸ்) முடிவுகள் குறித்து தலைமை ஆசிரியர்களுடனான ஆய்வுக் கூட்டம் புரசைவாக்கத்தில் நேற்று நடைபெற்றது.

இதற்கு தலைமை வகித்து பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பேசியதாவது: தமிழகத்தில் 16வது மாவட்டமாக தற்போது சென்னையில் உள்ள தலைமை ஆசிரியர்களை சந்தித்து கருத்துகளை கேட்டுள்ளேன். நமது மாநிலத்தில் மற்ற மாவட்டங்களில் தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை குறைவாகும்.

ஆனால், சென்னையில் தனியார் பள்ளிகள் அதிகம். கடன் வாங்கியாவது தங்கள் பிள்ளைகளை தனியார் பள்ளியில் சேர்த்துவிடலாம் என்ற எண்ணம் சென்னையில் வசிக்கும் பெற்றோரிடம் உள்ளது. தனியார் பள்ளிக்கு சென்றது போக மீதமுள்ளவர்கள் தான் அரசுப் பள்ளிகளைத் தேடி வருகின்றனர். அதைப் புரிந்து கொண்டு அவர்களுக்கான கல்வியை வழங்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் கொண்டுவரப்படுகின்றன. பள்ளியில் பாடங்களை மட்டுமின்றி வாழ்க்கைக்கான அறத்தையும் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். அரசுப் பள்ளிகளில் கற்பித்தல் தரம் மிகவும் முக்கியம். அவற்றை தொடர்ந்து மேம்படுத்த வேண்டும். அரசுப் பள்ளிகளில் 4 லட்சம் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளதற்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இவ்வாறு அவர் பேசினார்.

## செய்யாறு அருகே விவசாயிகள் திடீர் சாலை மறியல்

செய்யாறு, ஆக.2-

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு கலவையில் நெல் கொள்முதல் செய்யாததால் நேற்று இநாம் செயலி திட்டத்தை கைவிட கோரி விவசாயிகள் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர்.

செய்யாறு ஒழுங்குமுறை விற்பனை கூடத்திலும் வியாபாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதனால் நேற்று 2வது நாளாக சுமார் 15 ஆயிரம் மூட்டை நெல் கொள்முதல் செய்யப்படாமல் தேக்கமடைந்துள்ளது. இதனால் வேதனையடைந்த விவசாயிகள் 100க்கும் மேற்பட்டோர் செய்யாறு ஆற்காடு சாலையிலுள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடம் எதிரே திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்த காவல்துறையினர் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது அதிகாரிகளிடம் கூறி உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். இதனை ஏற்றுக்கொண்ட விவசாயிகள் மறியலை கைவிட்டனர்.



# “கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை” மு.க.ஸ்டாலினை நலம் விசாரித்த பின் வைகோ பேட்டி

சென்னை, ஆக.02-

முதல்வர் மு.க.ஸ்டாலினை மதிமுக பொதுச் செயலாளர் வைகோ இன்று சந்தித்துள்ளார். பின்னர் அவர், “2026 தேர்தலில் திமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை” எனத் தெரிவித்துள்ளார்.

2026 சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி வரும் நிலையில், பிரேமலதா விஜயகாந்த், ஓபிஎஸ் மற்றும் வைகோ என வரிசையாக முதல்வர் ஸ்டாலினை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில், முதல்வர் ஸ்டாலினை மதிமுக பொதுச்செயலாளர் வைகோ மற்றும் அவரின் மகன் துரை வைகோ ஆகியோர் சந்தித்துள்ளனர். முதல்வர் ஸ்டாலின் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வந்திருக்கும் நிலையில், முதல்வர் ஸ்டாலினை சந்தித்து நலம் விசாரிக்க அவரின் வீட்டிற்கு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பின்போது, முதல்வரின் உடல்நலம் குறித்து வைகோ விசாரித்தார் என சொல்லப்படுகிறது. பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: மு.க.முத்து மறைவு குறித்து துக்கம் விசாரித்தேன். அதோடு, முதல்வர் ஸ்டாலினின் உடல்நலம் குறித்தும் விசாரித்தேன். அவர் மருத்துவமனையிலும் மக்கள் பணி தான் செய்து கொண்டிருந்தார்.

கவின் படுகொலையில் அரசு எடுத்த நடவடிக்கையை வரவேற் கிறேன். காவல்துறை என்ன தான் உடனுக்குடன் கைது நடவடிக்கை எடுத்தாலும், ஆணவக்கொலைகளை தடுக்க கடும் சட்டம் இயற்ற வேண்டும் என்ற எண்ணம் பரவலாக காணப்படுகிறது. இது குறித்து முதல்வரிடம் வலியுறுத்தினேன்.

2026 தேர்தலில் திமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை” இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# தண்ணீர் தொட்டியில் விழுந்து 10 வயது காட்டு யானை பலி: 3 மணி நேரம் போராடி உடல் மீட்பு

தொண்டாமுத்தூர், ஆக.02-

கோவை சிறுவாணி வனப்பகுதியில் இருந்து நேற்று அதிகாலை வெளியேறிய 10 வயது மதிக்கத்தக்க ஆண் யானை, 2 பெண் யானைகளுடன் காருண்யா நகர் அருகே விவசாய நிலத்தில் மேய்ந்தது. தகவலறிந்து வந்த வன ஊழியர்கள் யானையை அங்கிருந்து வனத்துக்குள் விரட்டினர். ஆனால், யானைகள் காருண்யாநகர் சப்பாணி மடை சோளப்படுகை என்ற இடத்திற்கு வந்தன.

அங்கு கோவை ஆர்.எஸ்.புரத்தை சேர்ந்த நிர்மலா தேவி (55) என்பவருக்கு சொந்தமான தென்னந்தோப்பில், 25 அடி ஆழம் கொண்ட தண்ணீர் தொட்டியில் தலைகுப்புற விழுந்து, 5 அடி உயரத்துக்கு தேங்கிய சேற்றில் தலை சிக்கிமூச்சுத்திணறி உயிரிழந்தது. தொண்டாமுத்தூர் தீயணைப்பு துறையினர் 2 பொக்லைன், ஒரு கிரேனுடன் சம்பவ இடத்துக்கு வந்தனர். நேற்று காலை 7.10க்கு மீட்பு பணியை தொடங்கினர்.

சுமார் 3 மணி நேரம் போராடி தொட்டியில் இறந்து கிடந்த யானையை ரோப் கயிறு கட்டி மீட்டனர். இது குறித்து வனத்துறையினர் கூறுகையில், திறந்தபடி உள்ள கிணறுகள், இதுபோன்ற தொட்டிகளை மூட வேண்டும். அலட்சியமாக இருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

# எதிர்க்கட்சிகளின் அமளியால் மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஆக.02-

பிஹார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற இரு அவைகளிலும் அமளியில் ஈடுபட்டதால் இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றம் வழக்கம்போல் இன்று காலை 11 மணிக்குக் கூடியது. சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் மக்களவை கூடியது. கேள்வி நேரம் தொடங்கியதும், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் அவையில் அமளியில் ஈடுபட்டனர். பிஹாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.



இதனை ஏற்க மறுத்த சபாநாயகர் ஓம் பிர்லா, கேள்வி நேரம் தொடரும் என்றும் உறுப்பின ர்கள் அமைதி காக்க வேண்டும் என்றும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். எனினும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த சபாநாயகர் ஓம் பிர்லா, உங்கள் அணுகுமுறை மிகவும் தவறானது. நாடாளுமன்ற விதிமுறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும். ஜனநாயகம் வலுப்பட வேண்டும் என்றால், பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும். இதுபோல் அமளியில் ஈடுபடுவதற்காக உங்களை மக்கள் தேர்ந்தெடு க்கவில்லை. மக்கள் தங்கள் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் நீங்கள் பேச வேண்டும் என்பதற்காகவே உங்களை தேர்ந்தெடுத்துள்ளார்கள் எனக் கூறினார்.

சபாநாயகரின் வார்த்தைகளை ஏற்க மறுத்த உறுப்பினர்கள், அவரது இருக்கையை முற்றுகை யிட்டு கோஷங்களை எழுப்பினர். இதையடுத்து, அவையை 2 மணி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதேபோல், மாநிலங்களவை அதன் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் தலைமையில் கூடியது. அப்போது, எதிர்க்கட்சி உறுப்பி னர்கள் பிஹார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தினர். இதை ஹரிவன்ஷ் ஏற்க மறுத்ததை அடுத்து அவர்கள் அமளியில் ஈடுபட்டனர். நீண்ட நேரம் அவர்களை சமாதானப்படுத்த ஹரிவன்ஷ் முயன்றார். எனினும், எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கோஷங்களை எழுப்பியபடி இருந்ததால் அவையை 12 மணிக்கு ஒத்திவைத்தார். அவை மீண்டும் அவை கூடியபோதும் அமளி நீடித்ததால், நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக, நாடாளுமன்றத்துக்கு வெளியே எதிர்க்கட்சி எம்பிக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், பிஹார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து இரு அவைகளும் விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தினர். பிஹார் வாக்காளர் பட்டியலின் வரைவுப் பட்டியலை தேர்தல் ஆணையம் இன்று வெளியிட இருப்பது குறிப்பிடத்தக்கது.

# அமர்நாத் யாத்திரையில் 4 லட்சம் பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசனம் செய்தனர்

ஸ்ரீநகர், ஆக.02-

தெற்கு காஷ்மீர் இமயமலையில், கடல் மட்டத்தில் இருந்து 3,888 மீட்டர் உயரத்தில் அமர்நாத் குகைக் கோயில் உள்ளது. இங்கு இயற்கையாக உருவாகும் பனி லிங்கத்தை தரிசனம் செய்ய ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் புனித யாத்திரை செல்கின்றனர். இந்த ஆண்டுக்கான அமர்நாத் புனித யாத்திரை கடந்த ஜூலை 3ம் தேதி தொடங்கியது ஆகஸ்ட் 9ம் தேதி வரை யாத்திரை நடைபெற உள்ளது.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா நேற்று வெளியிட்ட ‘எக்ஸ்’ பதிவில், “பாபா அமர்நாத் சாத்தியமற்றதை சாத்தியமாக்குகிறார்.

அவரது ஆசிர்வாதத்தால், குகைக் கோயிலில் தரிசனம் செய்த பக்தர்கள் எண்ணிக்கை 4 லட்சத்தை கடந்துள்ளது. இந்த அற்புதத்திற்காக நான் சிவபெருமானை வணங்குகிறேன். மேலும் புனித யாத்திரையை பக்தர்களுக்கு ஒரு தெய்வீக அனுபவமாக மாற்றுவதில் பங்கு வகிக்கும் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்” என்று கூறியுள்ளார்.

# திருப்பூர் பல்லடம் பகுதியில் சுமார் 12 கிலோ கஞ்சா விற்பனைக்கு வைத்திருந்த பெண் கைது

திருப்பூர், ஆக.02-

திருப்பூர் மாவட்டம் பல்லடம் கோட்டம் பல்லடம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கவுண்டம்பாளையம் வட்டம் காட்டத் தோட்டம் பகுதியில் ஒரு பெண் கஞ்சா விற்பனையில் ஈடுபடுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் உதவியாய்வாளர் கோவிந்தராஜ் தலைமையிலான பெண் போலீசார் அப்பதி பகுதிக்கு விரைந்து சென்று தகவலாளி அடையாளம் காட்டிய வேலுச்சாமி என்பவர் என்பவரது லைன் வீடுகளில் இருந்த உஷா என்பவர் தங்கி இருக்கும் வீட்டை சோதனை செய்தபோது அங்கு விற்பனைக்காக சுமார் 12 கிலோ கஞ்சாவை பதுக்கி வைத்திருந்ததை எடுத்து ஆஜர் படுத்தி தான் அதை ஒடிசாவில் இருந்து வாங்கி வந்ததாக தெரிவித்ததை அடுத்து மேற்படி உஷா கணவர் பெயர் சிவசுப்பிரமணி மலாய் துருக்கி மத்திய பிரதேசம் என்பவரை காலை 9 மணிக்கு கைது செய்து மேற்படி கஞ்சா வெப்பத்தை பற்றி பல்லடம் காவல் நிலையம் வந்து உஷா மீது காவல் நிலைய குற்ற எண் 803 ஃப்ளாஷ் 2025 இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர் பல்லடம் அவர்கள் முன்பு ஆஜர் படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# இந்தியா பாக். போரை நிறுத்திய ட்ரம்ப்புக்கு அமைதி நோபல் வழங்க வேண்டும்: வெள்ளை மாளிகை

வாஷிங்டன், ஆக.02-

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பு செயலாளர் கரோலின் லீவிட் கூறியுள்ளார். இந்தியா பாகிஸ்தானுக்கு இடையிலான மோதல் உட்பட உலகெங்கிலும் உள்ள பல மோதல்களை ட்ரம்ப் முடிவுக்குக் கொண்டு வந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.



வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய கரோலின் லீவிட், “அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தற்போதைய தாய்லாந்து மற்றும் கம்போடியா மோதல், இஸ்ரேல் மற்றும் ஈரான் போர், ருவாண்டா மற்றும் காங்கோ ஜனநாயக குடியரசு மோதல், இந்தியா மற்றும் பாகிஸ்தான் மோதல், செர்பியா மற்றும் கொசாவோ மோதல், எகிப்து மற்றும் எத்தியோப்பியா மோதல் ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது ஆறு மாத பதவிக் காலத்தில் சராசரியாக மாதத்திற்கு ஒரு சமாதான ஒப்பந்தம் அல்லது போர் நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளர். எனவே இது அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதற்கான நேரம்” என்றார்.

மே 10ஆம் தேதி அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் உடனடி போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டதாக ட்ரம்ப் சுமார் 30 முறை கூறியுள்ளார். ஆனால், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் நாடாளுமன்றத்தில் பேசுகையில், எந்த நாட்டின் தலைவரும் இந்தியாவிடம் ஆபரேஷன் சிந்தூரை நிறுத்தச் சொல்லவில்லை என்று கூறினார்.

இந்தியா பாகிஸ்தான் போர் நிறுத்தத்தில் எந்த நாடும் மத்தியஸ்தம் செய்யவில்லை என இந்தியா தொடர்ந்து கூறி வருகிறது. இந்த நிலையில் இந்தியா பாகிஸ்தான் மோதலை நிறுத்தியதால், ட்ரம்ப்புக்கு நோபல் பரிசு வழங்க வேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது மீண்டும் சலசலப்பை உருவாக்கியுள்ளது.

# கர்ப்பிணி பெண்ணுக்கு 108 ஆம்புலன்சில் பிரசவம் ஆண் குழந்தை பிறந்தது

விருதுநகர், ஆக.02-

விருதுநகர் மாவட்டம் குகுர்குளம் கிராமத்தை சேர்ந்த முத்துக்கருப்பன் என்பாரின் மனைவி ஐஸ்வர்யா நிறைமாத கர்ப்பிணியான இவருக்கு நேற்று மாலை திடிர் என பிரசவவலி ஏற்பட்டது.

இதையடுத்து அவரது கணவர் 108 அம்புலன்ஸ் உதவி அணுகி உள்ளார் சிறிது நேரத்தில் திருச்சுழி அரசு மருத்துவமனையில் இருந்து 108 ஆம்புலன்ஸ் விரைந்து சென்று பிரசவவலியில் துடித்து கொண்டிருந்த ஐஸ்வர்யாவை ஏற்றிக்கொண்டு விருதுநகர் அரசு மருத்துவமனை கல்லூரி மருத்துவமனைக்கு விரைந்து கொண்டிருந்தது.



ஆனல் பிரசவவலி அதிகரித்து ஐஸ்வர்யாவிற்கு ஆம்புலன்சிலேயே ஆண் குழந்தை பிறந்தது. பின்னர் தாயும் சேயும் விருதுநகர் அரசு கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். தாயும் சேயும் தற்போது நலமுடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.



■ ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் பெ.தட்சினாமூர்த்திக்கு நடைபெற்ற பணிநிறைவு பாராட்டுவிழாவில் ஊரக வளர்ச்சித்துறை அலுவலக சங்க நிர்வாகிகள், உதவி இயக்குநர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்துகொண்டனர் 30 வருடங்களாக ஊரக வளர்ச்சித்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தட்சினாமூர்த்திக்கு ஊரக வளர்ச்சித்துறை அலுவலக சங்க நிர்வாகிகள் பாராட்டு தெரிவித்தனர்.

# திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி உட்பட்ட வார்டுகளில் ஜெயராமன் எம்.எல்.ஏ தலைமையில் பூத் கிளை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

திருப்பூர், ஆக.02-

திருப்பூர் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் ஜெயராமன் எம்எல்ஏ தலைமையிலும் பகுதி கழகச் செயலாளர் மக்கள் சேவகர் சிவாள தினேஷ் முன்னிலையிலும் நடைபெற்றது கூட்டத்தில் கழக பொதுச்செயலாளர் திருப்பூர் சுற்றுப்பயணம் வருகை குறித்தும், வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள் மற்றும் திமுக அரசை கண்டித்து தெருமுனை பிரச்சார கூட்டங்கள் நடத்துவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்

மேலிட பார்வையாளர் .செ.தாமோதரன் எம்எல்ஏ பூத் கிளை நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார் இதில் திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கே.என் விஜயகுமார் எம்எல்ஏ




கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசாமி ,மாமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி, மாநகராட்சி எதிர்க்கட்சி கொறடாவுமான கண்ணப்பன், மாவட்ட கழக துணைச் செயலாளர் பூலுவபட்டி பாலு, கழக பொதுக்குழு உறுப்பினர் தம்பிமனோகரன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் திரு.சிட்டி பழனிச்சாமி, பகுதி கழக செயலாளர். ஹரிஹர சுதன்.மாவட்ட மகளிரனி செயலாளர் திருமதி.சுந்தராம்பாள், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் பழனிச்சாமி, மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் தம்பி மைதீன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் .முருகேசன், மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் ரத்தினகுமார்,மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் .மார்க்கெட் சக்திவேல், மாவட்ட பனியன் அண்ணா தொழிற்சங்க செயலாளர் விஸ்வநாதன்,மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரணி தலைவர் .கண்ணப்பன், மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் . ஆண்டவர் பழனிச்சாமி, வட்ட கழக செயலாளர்கள் பாலதண்டாயுதம், கந்தவேல், சிவசுப்பிரமணியம் செல்வராஜ், .ரமேஷ், பகுதி கழக துணை செயலாளர் திருமதி. உமாமகேஸ்வரி, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணை செயலாளர் தங்கவேல், மாவட்ட பிரதிநிதிகள் கோவிந்த், வீரமணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர் சிலம்பரசன் ,மாவட்ட மாணவரனி இணை செயலாளர் ஹரிபிரசாத், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு துணை தலைவர் மோகன் மற்றும் மாவட்ட, பகுதி, வார்டு, கழக நிர்வாகிகள், பூத் கிளை செயலாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA-2), சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பங்கேற்று சிறப்பித்தனர்.

# சென்னை விமானநிலையத்தில் 6 மாதங்களில் பயணிகளின் எண்ணிக்கை 8.23 சதவீதம் அதிகரிப்பு: விமானங்கள் எண்ணிக்கையும் கணிசமாக உயர்வு



மீனம்பாக்கம், ஆக.02-

சென்னை விமான நிலையத்தில் கடந்த ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான 6 மாதங்களில் பயணிகளின் எண்ணிக்கை 8.23 சதவீதமாக அதிகரித் துள்ளது. இங்கு உள்நாட்டு பயணிகளின் எண்ணிக் கையும் விமானங்களின் எண்ணிக் கையும் கணிசமான அளவில் உயர்ந்துள்ளன என்று விமான நிலைய அதிகாரிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். சென்னை விமானநிலையத்தின் பன்னாட்டு முனையத்தில் நடப்பாண்டு ஜனவரி 1ம் தேதி முதல் ஜூன் 30ம் தேதி வரையிலான 6 மாதங்களில் புறப்பாடு, வருகை பகுதியில் 30,49,693 பேர் பயணித்துள்ளனர். எனினும், கடந்த 2024ம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் 29,73,265 பயணிகள் மட்டுமே பயனித்துள்ளனர். கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில், இந்த ஆண்டு பன்னாட்டு முனையத்தில் பயணிகள் எண்ணிக்கை 2.57 சதவீதம் அதிகரித்துள்ளது.

அதேபோல், உள்நாட்டு முனையத்தில் நடப்பாண்டு ஜனவரி 1ம் தேதி முதல் ஜூன் 30ம் தேதி வரையிலான 6 மாதங்களில் வருகை, புறப்பாட்டில் பயணிகளின் எண்ணிக்கை 86,93,278 ஆகும். இதுவே கடந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் பயணிகளின் 78,78,678 எனக் குறிப்பிடத்தக்கது. நடப்பாண்டை கடந்தாண்டோடு ஒப்பிடுகையில், சென்னை விமான நிலையத்தில் நடப்பாண்டு முதல் 6 மாதங்களில் பயணிகளின் எண்ணிக்கை 10.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மேலும், சென்னை விமானநிலையத்தின் பன்னாடு மற்றும் உள்நாட்டு என 2 முனையங்களிலும் நடப்பாண்டின் முதல் 6 மாதங்களில் பயணிகள் வருகையின் மொத்த எண்ணிக்கை 1,17,42,971 ஆகும். இதுவே, கடந்த ஆண்டு முதல் 6 மாதங்களில் மேற்கண்ட 2 முனைய ங்களில் பயணிகளின் வருகை, புறப்பாட்டின் மொத்த எண்ணிக்கை 1,08,51,944 ஆகும். இச்சதவீதத்தை கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டின் முதல் 6 மாதங்களில் பன்னாடு மற்றும் உள்நாட்டு முனையங்களில் பயணித்தவர்களின் எண்ணிக்கை 8.23 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அதேபோல் சென்னை விமான நிலையத்தில் விமானங்களின் எண்ணிக்கை நடப்பாண்டின் முதல் 6 மாதங்களில் பன்னாடு, உள்நாடு என மொத்தம் 77,748 விமானங்கள் இயக்கப்பட்டுள்ளன. இதுவே கடந்தாண்டின் முதல் 6 மாதங்களில் இவை இரண்டிலும் மொத்தம் 72,216 விமானங்கள் மட்டுமே இயக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கடந்தாண்டை விட நடப்பாண்டில் கூடுதலாக 5,532 விமானங்கள் இயக்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை விமான நிலையத்தின் பன்னாட்டு முனையத்தில் இருந்து சிங்கப்பூர், மலேசியா, துபாய், அபுதாபி, தோகா, சார்ஜா, இலங்கை, லண்டன், பிராங்பர்ட் ஆகிய இடங்களுக்கு செல்லும் விமானப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

மேலும் உள்நாட்டு முனையத்தில் டெல்லி, மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர், கொச்சி, மதுரை, திருச்சி, கோவை, தூத்துக்குடி ஆகிய விமானங்களிலும் பயணிகளின் கூட்டம் அதிகரித்து வருகிறது. இவற்றை கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டின் முதல் 6 மாதங்களில் பயணிகள் மற்றும் விமானங்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் உயர்ந்துள்ளன என்று சென்னை விமானநிலைய அதிகாரிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.





# திருப்பூர் 15 வேலம்பாளையம் பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் முகாம்

திருப்பூர், ஆக.02-

திருப்பூர் மாநகராட்சி மேயர் .ந.தினேஷ்குமார் மண்டலம்1, வார்டு12, 15 வேலம்பாளையம் பகுதியில் உள்ள கரிய காளியம்மன் திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் முகாம் நடைபெற்று வருவதை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

உடன் 1வது மண்டல தலைவர் திருமதி வெ.உமாமகேஸ்வரி, துணை திரு.சுந்தரராஜன், உதவி ஆணையாளர் கணேஷ் குமார். திமுக மாநகர செயலாளர் தங்கராஜ், வடக்கு தொகுதி பொறுப்பாளர் குமணன்,

பகுதி செயலாளர் ராமதாஸ், வர்த்தக அணி அமைப்பாளர் மணி, மாநில மகளிர் பிரச்சார அணி செயலாளர் உமா மகேஸ்வரி, மாநகரத் துணைச் செயலாளர் ராமசாமி,தேவி முருகேசன், வடக்கு ஒன்றிய செயலாளர் காளிபாளையம் விஸ்வநாதன், மாமன்ற உறுப்பினர்கள் அனுசுயா தேவி சண்முகசுந்தரம், இளம் பொறியாளர்கள் பிரபாகரன், கணேஷ் செந்தில், சிவக்குமார், மோகன்ராஜ், அக்கீம், சுகாதார

ஆய்வாளர் கோகுல் நாதன்.சுகாதார அலுவலர் பரமசிவம், திமுக வார்டு செயலாளர் செந்தில்குமார். சண்முகசுந்தரம். அய்யம்பெருமாள். மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.




■ இரவு பகல் பாராமல் எந்த இடத்திலும் பொதுமக்களுக்கான சேவை செய்வது திராவிட மாடல் அரசு என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு திண்டுக்கல் இரயில் நிலையத்தில் ஆத்தூர் தொகுதி பொதுமக்களின் கோரிக்கைகளை பெற்று தீர்வு வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு பொதுமக்கள் மனதார பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# ஆகஸ்ட் 7ல் பாமக தலைவர் அன்புமணியின் 2ம் கட்ட சுற்றுப் பயணம்

சென்னை, ஆக.02-

பாமக தலைவர் அன்புமணி ஆக.7ம் தேதி 2ம் கட்ட மக்கள் உரிமை மீட்புப் பயணத்தை தொடங்குகிறார். பாமக தலைமை நிலையம் வெளியிட்ட அறிவிப்பில் கூறியதாவது; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள 10 வகையான உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்குடன் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் கடந்த ஜூலை 25ம் தேதி திருப்போரூர் நகரில் தொடங்கி தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணத்தை மேற்கொண்டு வருகிறார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு 1.சமூக நீதிக்கான உரிமை, 2.வன்முறையில்லா வாழ்வுக்கான மகளிர் உரிமை, 3. வேலைக்கான உரிமை, 4. விவசாயம் மற்றும் உணவுக்கான உரிமை, 5. வளர்ச்சிக்கான உரிமை, 6. நல்லாட்சி, அடிப்படை சேவைகளுக்கான உரிமை, 7. கல்வி, நலவாழ்வுக்கான உரிமை, 8. மது, போதைப் பொருள்களால் பாதிக்கப்படாமல் இருக்கும் உரிமை, 9. நீடித்திருக்கும் நகர்ப்புற வளர்ச்சிக்கான உரிமை, 10. ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கான உரிமை ஆகிய 10 உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டிருக்கும் இந்த பயணத்தின் முதற்கட்டம் வரும் 4ம் தேதி மாலை திருப்பத்தூர் நகரில் நிறைவடைய உள்ளது.

அதைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணம் வரும் ஆகஸ்ட் 7ம் தேதி வந்தவாசியில் தொடங்கி, ஆகஸ்ட் 18ம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் நிறைவடையவுள்ளது. இரண்டாம் கட்ட பயணத்தின் விவரங்கள் வருமாறு:

ஆகஸ்ட் 7 வந்தவாசி, செய்யாறு.

ஆகஸ்ட் 8 பென்னாத்தூர், போளூர்.

ஆகஸ்ட் 11 திண்டிவனம், செஞ்சி.

ஆகஸ்ட் 12 மைலம், விழுப்புரம், விக்கிரவாண்டி.

ஆகஸ்ட் 13 ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை.

ஆகஸ்ட் 17 பர்கூர், ஊத்தங்கரை.

ஆகஸ்ட் 18 கிருஷ்ணகிரி, ஒசூர்.

மூன்றாம் கட்ட பயண விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளையும், நலன்களையும் மீட்டெடுப்பதற்கான இந்த தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் பெருமளவில் பங்கேற்று ஆதரவளிக்க வேண்டும் என்று அன்புடன் பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் முதுகலை படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஆக.02-

அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப் படிப் புக்கு தொடர்ந்து ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: நடப்பு கல்வியாண்டில் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் முதுகலை படிப்புக்கு ஆன்லைனில் விண்ணப்பிப் பதற்கான கடைசி நாள் ஜூலை 31 (நேற்று) என அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது முதல்வரின் அறிவுறுத்தலின் பேரில் விண்ணப்பப் பதிவை ஆகஸ்ட் 1 (இன்று) முதல் தொடர்ந்து மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்கள் ஷ்ஷ்ஷ்.மீஸீரீணீஉணீ.வீஸீ என்ற இணைய தளத்தைப் பயன்படுத்தி தொடர்ந்து விண்ணப்பிக்கலாம்.

ஜூலை 31 வரை விண்ணப் பித்த மாணவர்களுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டு சிறப்புப் பிரிவு மாணவர் களுக்கான கலந்தாய்வு ஆக. 11ம் தேதியும் பொது கலந்தாய்வு ஆக.13ம் தேதியும் தொடங்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



# ஏழுமலையான் கோயில் முன் ரீல்ஸ் செய்தால் கடும் நடவடிக்கை

திருமலை, ஆக.02-

திருப்பதி ஏழுமலையான் கோயில் முன்பும் மாடவீதிகளிலும் ரீல்ஸ் எடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திருப்பதி தேவஸ்தானம் எச்சரித்துள்ளது. திருப்பதி ஏழுமலையான் கோயில் முன்னும், மாட வீதிகளிலும் மேலும் சில முக்கிய இடங்களிலும் திருமலைக்கு வரும் சிலர் தங்களின் மொபைல் போனில் ரீல்ஸ் எடுத்து அவற்றை சமூக வலைதளங்களில் வெளியிட்டு வருகின்றனர்.

இது சமீப காலமாக அதிகரித்துள்ளது. புண்ணிய திருத்தலமாக விளங்கும் ஏழுமலையான் கோயிலில் இதுபோன்றவர்களின் ரீல்ஸ் மோகத்தால் பக்தர்களின் மனம் புண்படுகிறது. ஆதலால் திருமலையில் ரீல்ஸ் எடுப்பவர்கள் மீது இனி வழக்குப் பதிவு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் இதனை புரிந்து நடந்து கொள்ளவேண்டும் என திருப்பதி தேவஸ்தானம் கேட்டுக்கொண்டுள்ளது.

## சின்னாளபட்டியில் போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்ட நபருக்கு 5 ஆண்டுகள் சிறை, ரூ.5000 அபராதம்



திண்டுக்கல், ஆக.02-

திண்டுக்கல் சின்னாளப்பட்டி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியை சேர்ந்த சிறுமிக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு பாலியல் தொந்தரவு செய்த வழக்கில் பாண்டி(40) என்பவரை சின்னாளப்பட்டி போலீசார் போக்சோவில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் சிறப்பு போக்சோ நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த நிலையில் சின்னாளப்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் வசந்தகுமார் தலைமையிலான போலீசார் மற்றும் அரசு வழக்கறிஞர் ஆகியோரின் சீரிய முயற்சியால் இன்று சிறப்பு போக்சோ நீதிமன்ற நீதிபதி அவர்கள் பாண்டிக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.5000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்

# திண்டுக்கல் சுக்காம்பட்டி கிராமத்தில் தேவாங்கு பாதுகாப்பு மையம் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் ஆய்வு

திண்டுக்கல், ஆக.02-

திண்டுக்கல் மாவட்டம், சுக்காம்பட்டி கிராமத்தில் தேவாங்கு பாதுகாப்பு மையம் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தேவாங்குகளை பாதுகாக்கும் பொருட்டு, பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும், அவை விவசாயத்தில் வகிக்கும் முக்கியப் பங்கினை எடுத்துரைக்கும் விதமாக, திண்டுக்கல் வனக்கோட்டம், அய்யலூர் வனச்சரகம், சுக்காம்பட்டி கிராமத்தில் தேவாங்கு பாதுகாப்பு மையம் சுமார் 8.11 எக்டேர் பரப்பளவில் அமைத்திட ரூ.16.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவாங்கு பாதுகாப்பு மையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த தேவாங்கு பாதுகாப்பு மையத்தில், நுழைவு வளைவு, கலந்துரையாடும் மையம், பொழுதுபோக்கு மையம், பாதுகாப்பு மையம் மற்றும் இரவு ஸ்டுடியோ, கடைகள், கழிப்பறை வசதி, விருந்தினர் அறை, பார்வையாளர் மையம், சுற்றுச்சுவர் கட்டுதல், சாலைகள் அமைத்தல், சாகச மண்டலம் (Adventure Zone), குடிநீர் வசதி, உயர்நிலை குடிநீர் தொட்டி அமைத்தல், சுற்றிலும் வேலி அமைத்தல், உள்அலங்காரம் செய்தல், சிறுவர்கள் விளையாடும் அரங்கம், புல்வெளிகள் அமைத்தல், நடைபாதைகள் அமைத்தல், ஆங்காங்கே விளக்க பெயர் பலகைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேவாங்கு பாதுகாப்பு மையம் அமைக்கும் இடத்திற்கு சென்று வர உரிய தார்ச்சாலை, தெருவிளக்கு, மழைநீர் வடிகால் ஓடை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, திண்டுக்கல் மண்டல வனப்பாதுகாவலர் திருமதி இரா.காஞ்சனா, இ.வ.ப., மற்றும் திண்டுக்கல் மாவட்ட வன அலுவலர் திரு.பு.மு.ராஜ்குமார், இ.வ.ப., மற்றும் பலர் உடனிருந்தனர்.




■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில், தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், கொடியசைத்து தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட சமூக நல அலுவலர்(பொ) திருமதி பெ.விஜயராணி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் திட்ட அலுவலர்(பொ) திருமதி மா.அமுதகலா மற்றும் பலர் உள்ளனர்.

# ஒகேனக்கலில் 4 நாட்களுக்குப் பிறகு பரிசல் இயக்க மட்டும் மாவட்ட நிர்வாகம் அனுமதி

ஒகேனக்கல், ஆக.02-

ஒகேனக்கலில் நீர்வரத்து குறைந்ததால் 4 நாட்களுக்குப் பிறகு பரிசல் இயக்க மட்டும் மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது. காவிரி நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்த தொடர் மழைக் காரணமாக கர்நாடகாவில் உள்ள கபின் மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகள் நிரம்பின. இந்த இரு அணைகளில் இருந்து தமிழகத்திற்கு வெளியேற்றப்பட்ட உபநீர் காரணமாக 5 நாட்களுக்கு முன்பு ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 1,25,000 கன அடி வரை அதிகரித்திருந்தது.




ஒகேனக்கலுக்கு வரும் நீரின் அளவும் அதிகரித்துக் காணப்பட்டதால் பரிசல் இயக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதன்பிறகு கர்நாடகா அணைகளில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டதால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து தொடர்ந்து படிப்படியாக குறைந்து வருகிறது. இந்நிலையில், தமிழக எல்லைப் பகுதியான பிலிகுண்டுலுவில் நேற்று மாலை நிலவரப்படி வினாடிக்கு 28,000 கன அடியாக குறைந்த நீர்வரத்து, இன்று காலை 6 மணி நிலவரப்படி மேலும் குறைந்து வினாடிக்கு 20,000 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

இந்த நீர்வரத்து குறைந்ததன் காரணமாக பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் மீண்டும் அனுமதி வழங்கியுள்ளது. சின்னாறு கோத்திகள் பரிசல் துறையில் இருந்து மணல் தீட்டு வரை பரிசல் இயக்க மட்டும், 4 நாட்களுக்குப் பிறகு மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கி உள்ளது. மேலும் குளிப்பதற்கான தடை தொடர்ந்து 5வது நாளாக நீடித்து வருகிறது.



## பழமையான கோயில்களில் ஆகம விதிப்படி அர்ச்சகர்களை நியமிக்க வேண்டும்: ஸ்ரீ வில்லிபுத்தூர் ஜீயர் கருத்து

திருப்பத்தூர், ஆக.02- பழமையான கோயில்களில் ஆகம விதிமுறைகளுக்கு உட்பட்டே அர்ச்சகர்களை நியமிக்க வேண்டும் என்று ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீசடகோப ராமானுஜ ஜீயர் கூறினார். சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகேயுள்ள திருக்கோஷ்டியூர் சவுமிய நாராயணப் பெருமாள் கோயிலில் அஷ்டாங்க விமானத்துக்கு தங்கத் தகடு பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3 தளங்கள் கொண்ட இந்த விமானத்தில் தங்கத் தகடு பதிப்பதற்காக 18 ஆண்டுகளுக்கு மேலாக தங்கம் சேகரிக்கப்பட்டது. கடந்த ஆண்டு நவ. 14ம் தேதி தங்கத்தகடு பதிக்கும் பணி தொடங்கியது. இந்நிலையில், திருக்கோஷ்டியூர் கோயிலுக்கு நேற்று வந்த ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர், அஷ்டாங்க விமானத்தில் பொருத்தப்பட உள்ள தங்கத் தகட்டில் தங்க இலைகளை ஒட்டினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அறநிலையத் துறை செயல்பாடுகளில் எனக்கு குறை ஒன்றும் தெரியவில்லை. நாம் ஒற்றுமையாக சாமி கும்பிட்டால் தகராறு வராது. அரசும் கோயில் விவகாரத்தில் தலையிடாது. நமக்குள் தகராறு ஏற்படுவதால், கோயில்களை அரசு எடுத்துக் கொள்கிறது.

கடவுள் இல்லை என்று சொல்லக் கூடியவர்கள், அதிக கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தியதை எண்ணி மகிழ்ச்சிடைய வேண்டும். இதன் மூலம் அவர்களுக்கும் கடவுள் நம்பிக்கை இருக்கிறது என்பதை கடவுள் நிரூபித்துள்ளார். பழமையான கோயில்களில் ஆகம விதி மற்றும் நடைமுறைக்கு உட்பட்டே அர்ச்சகர்களை நியமிக்க வேண்டும். அவரவர் இஷ்டத்துக்கு கட்டப்படும் தனியார் கோயில்களில் யார் வேண்டுமானாலும் அர்ச்சகராகலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## கூட்டுறவு, ரயில்வே துறைகளுக்கு ரூ.13 ஆயிரம் கோடி திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்



புதுடெல்லி, ஆக.02- கூட்டுறவு, ரயில்வே உள்ளிட்ட பல முக்கிய திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியது. அதன்படி, தேசிய கூட்டுறவு மேம்பாட்டு கழகத்திற்கு (என்சிடிசி) நான்கு ஆண்டுகளுக்கு ரூ.2,000 கோடி மானிய உதவி வழங்க பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கடன் வழங்கல் நடவடிக்கைகளுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 29 கோடி உறுப்பினர்களைக் கொண்ட 8.25 லட்சத்துக்கும் அதிகமான கூட்டுறவுகளுக்கு என்சிடிசி கடன்களை வழங்குகிறது.

இதில் உள்ள மொத்த உறுப்பினர்களில் 94 சதவீதம் பேர் விவசாயிகள். இதேபோன்று, உணவு பதப்படுத்தும் துறையை மேம்படுத்துவதற்கான முதன்மை திட்டமான பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா (பிஎம்கேஎஸ்ஒய்) பட்ஜெட் ஒதுக்கீட்டை மத்திய அமைச்சரவை ரூ.1,920 கோடி அதிகரித்து ரூ.6,520 கோடியாக உயர்த்தியுள்ளது.

ரயில்வே அமைச்சகத்தின் சுமார் ரூ.11,169 கோடி மதிப்பிலான நான்கு திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியது. இதன்மூலம், 6 மாநிலங்களில் 13 மாவட்டங்களை உள்ளடக்கிய நான்கு மல்டி டிராக் ரயில் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

## மெட்ரோ ரயிலை விரும்பும் சென்னை மக்கள்.. ஜூலை மாதத்தில் மட்டும் 1 கோடி பேர் பயணம் : 10 ஆண்டுகளில் முதல் முறை



சென்னை, ஆக.02- ஒரே மாதத்தில் 1 கோடி பயணிகளை கடந்த சென்னை மெட்ரோ 2025 ஜூலை மாதத்தில் 1 கோடிக்கும் அதிகமாக பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். இது தொடர்பான செய்தி குறிப்பில், "சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ இரயில் பயணிகளுக்கும் போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பக தன்மையான பாதுகாப்பான வசதியை வழங்கி வருகிறது.

சென்னை மெட்ரோ இரயில் சேவை தொடங்கப்பட்ட பத்து ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில், 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 1,03,78,835 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணித்துள்ளதாகவும், ஜூன் மாதத்தை விட ஜூலை மாதத்தில் 11,58,910 பயணிகள் மெட்ரோ இரயில்களில் அதிகம் பயணித்துள்ளதாகவும், இந்த பயணிகளின் எண்ணிக்கை மெட்ரோ இரயில் சேவை தொடங்கியதில் இருந்து இதுநாள் வரையிலான எண்ணிக்கையில் இதுவே அதிக எண்ணிக்கை என்றும் மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நடப்பாண்டு ஜனவரி மாதத்தில் 86,99,344 பயணிகளும், பிப்ரவரி மாதத்தில் 86,65,803 பயணிகளும், மார்ச் மாதத்தில் 92,10,069 பயணிகளும், ஏப்ரல் மாதத்தில் 87,89,587 பயணிகளும், மேமாதத்தில் 89,09,724 பயணிகளும், ஜூன் மாதத்தில் 92,19,925 பயணிகளும் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். அதிகபட்சமாக 04.07.2025 அன்று 3,74,948 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

2025, ஜூலை மாதத்தில் மட்டும் பயண அட்டைகளை (Travel Card Ticketing System) பயன்படுத்தி 6,55,991 பயணிகள், க்யூஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 45,66,058 பயணிகள் (CMRL Mobile App 1,55,729; Single journey Paper QR / Token 20,78,278; Static QR 3,07,083; Whatsapp – 6,12,717; Paytm 4,18,788; PhonePe – 3,33,902; ONDC – 6,59,561), சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது இயக்க அட்டை) பயன்படுத்தி 51,56,786 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், Digital SVP, க்யூஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு, Whatsapp – (+91 83000 86000), Paytm App, PhonePe மற்றும் சிங்கார சென்னை அட்டை போன்ற பயணச்சீட்டுகளை பயன்படுத்தி மெட்ரோ இரயில்களில் பயணிப்பவர்களுக்கு 20% கட்டணத் தள்ளுபடியை வழங்குகிறது.மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி.' இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

## ராஜஸ்தான் மாநிலத்தில் சிந்து சமவெளி நாகரிகம்: ஹரப்பா காலத்து தொல்பொருட்கள் பாலைவனத்தில் கண்டுபிடிப்பு

புதுடெல்லி, ஆக.02- ராஜஸ்தான் மாநிலத்தின் வறண்ட பாலைவனத்தில் சிந்துசமவெளி தொடர்பான நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ஆழமான பாலைவன பகுதியில் ஹரப்பா காலத்தின் தொல்பொருட்களும் கிடைத்துள்ளன. இந்தகண்டுபிடிப்பு, பண்டைய சிந்து சமவெளி நாகரிக எல்லைகளை மறுவடிவமைக்கும் முக்கிய தடயங்களை வெளிப்படுத்துவதாகக் கருதப்படுகிறது.

இது, ராஜஸ்தானின் ஆழமான பாலைவனத்திலும் சிந்து சமவெளியைப் போன்ற நாகரிக அடையாளம் இருப்பதற்கான முதல் சான்றாகும், மேலும் வடக்கு ராஜஸ்தானுக்கும் குஜராத்துக்கும் நடுவே உள்ள ஹரப்பா தளங்களுக்கு இடையேயான ஒரு முக்கிய இணைப்பாகவும் இது கருதப்படுகிறது. ஜெய்சால்மர் மாவட்டத்தில் உள்ள ராட்டாரி தேரியில் சிந்து சமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது.

ராம்கர் தாலுகாவிலிருந்து கிட்டத்தட்ட 60 கிமீ தொலைவிலும் பாகிஸ்தானின் சந்தனவாலாவிலிருந்து சுமார் 70 கிமீ தொலைவிலும் உள்ள இது தொலைதூர பாலைவனமாகும். அங்கு ஹரப்பா காலத்திய எச்சங்களும் அதன் அடையாளமான சில தொல்பொருட்களும் காணப்பட்டுள்ளன.

இந்த இடம் பிரபல தொல்பொருள் ஆராய்ச்சியாளர் பங்கஜ் ஜகானி தலைமையில் தோண்டப்பட்டது. இந்த கண்டுபிடிப்புகளை ராஜஸ்தான் பல்கலைக்கழகம் மற்றும் உதய்பூரில் உள்ள ராஜஸ்தான் வித்யாபீடம் ஆகியவற்றின் நிபுணர்கள் சரிபார்த்துள்ளனர்.



இப்பகுதியில் கிடைத்துள்ளவற்றில் பாரம்பரிய ஹரப்பா கலாச்சாரப் பொருட்களாக, சிவப்புப் பாத்திர மட்பாண்டங்கள், துளையிடப்பட்ட ஜாடிகள், டெரகோட்டா கேக்குகள், செர்ட் கத்திகள், களிமண் மற்றும் ஓடுகளாலான வளையல்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இதன் மையத்தில் நெடுவரிசை, ஆப்பு வடிவ செங்கற்கள் மற்றும் ஹரப்பா கட்டிடக்கலை வடிவங்களுடன் ஒத்துப்போகும் அடுத்தளங்களைக் கொண்ட ஒரு சூளையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல்கள், வரலாறு மற்றும் தொல்பொருள் ஆய்வாளர்களான முனைவர். கார்க்வால் மற்றும் ஜகானி ஆகியோரால் எழுதப்பட்ட ஒரு விரிவான ஆய்வுக் கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.

இது, சர்வதேச சகமதிப்பாய்வு செய்யப்பட்ட தொல்பொருள் ஆய்வு இதழ் ஒன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது வெளியீட்டிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால், ராஜஸ்தானின் இந்த பாலைவனத் தளம் ஹரப்பா ஆய்வுகளில் ஒரு முக்கிய இடமாக உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறும் வாய்ப்புகள் உள்ளன.

இந்தக் கண்டுபிடிப்பின் மூலம், உலகின் ஆரம்பகால நகரப்புற நாகரிகங்களில் விரிவடைந்து வரும் வரைபடத் தரவுகளில் ராஜஸ்தானும் இணையும். சுமார் 4,500 ஆண்டுகளுக்கு முன்பு அதன் கிராமப்புறநகர்ப்புற இயக்கவியல், சுற்றுச்சூழல் தழுவல் மற்றும் பிராந்தியங்களுக்கு இடையேயான இணைப்பைப் பார்ப்பதற்கு ஒரு புதிய பார்வையையும் இக்கண்டுபிடிப்பு வழங்குகிறது.

இது குறித்து ராஜஸ்தான் வித்யாபீடத்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் டாக்டர் ஜீவன் சிங் கார்க்வால் கூறுகையில், 'இது ஒரு சிறிய ஆனால் குறிப்பிடத்தக்க கிராமப்புற ஹரப்பா தளம். இது கிமு 2600 மற்றும் 1900 க்கு இடைப்பட்டதாக இருக்கலாம். இதன் இருப்பிடம் மற்றும் பண்புகள், வடக்கு ராஜஸ்தான் மற்றும் குஜராத் இடையே ஒரு முக்கியமான தொல்பொருள் இடைவெளியைக் குறைக்கின்றன'' என்றார்.

இது குறித்து ராஜஸ்தானின் சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறையைச் சேர்ந்த மூத்த வரலாற்றாசிரியர் தமேக் பன்வார், 'வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பு இது. இந்த தளம் ஹரப்பா கிராமப்புற குடியிருப்புகளின் தடயங்கள், வர்த்தகம் மற்றும் வள ஒருங்கிணைப்பு மூலம் நகர்ப்புற மையங்களை இணைப்பதில் அவற்றின் பங்கையும் பிரதிபலிக்கிறது.

சிந்து மற்றும் ரோஹ்ரி பிளேடு துண்டுகளிலிருந்து பெறப்பட்ட ஒரு நுண்ணிய கல், கருங்கல்லால் செய்யப்பட்ட கருவிகள் உள்ளிட்ட இந்த கண்டுபிடிப்பு, நாகரிகத்தின் பரந்த புவியியல் முழுவதும் நீண்ட தூர பரிமாற்றம் மற்றும் வள திரட்டலுக்கு மேலும் ஒரு சான்றாகும்.' என கூறினார்.



## மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் இயற்கை சந்தை ஆக.2, 3ல் நடைபெறும்

சென்னை, ஆக.02- மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் இயற்கை சந்தை (Natural Bazaar) வரும் 02.08.2025 (சனிக்கிழமை) மற்றும் 03.08.2025 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகரப் பகுதியில் விற்பனை செய்ய ஏதுவாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் மாத முதல் வார சனி, ஞாயிறு மற்றும் மாதத்தின் மூன்றாம் வார சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் இயற்கை சந்தை (Natural Bazaar) நடத்தப்படுகிறது. இம்மாதம் 02.08.2025 (சனிக்கிழமை) மற்றும் 03.08.2025 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் இயற்கை சந்தை நடைபெறவுள்ளது.

இந்த இயற்கை சந்தையில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் இயற்கை சார்ந்த பொருட்களான பாரம்பரிய அரிசிகள், சிறுதானியங்கள் மற்றும் சிறுதானிய மதிப்புக் கூட்டுப் பொருட்கள், காய்கறிகள், கீரைகள், பழ வகைகள், பனை ஓலைப் பொருட்கள் போன்ற இயற்கையுடன் சார்ந்த பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும் இந்த இயற்கை சந்தையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களால் தயார் செய்யப்படும் பல்சுவை உணவுப் பொருட்களும் கிடைக்கும். எனவே பொதுமக்கள் அனைவரும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் இயற்கை சந்தையைப் பார்வையிட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான உற்பத்திப் பொருட்களை வாங்கி மகிழ அன்புடன் அழைக்கின்றோம்.

## எழும்பூர் ரயில் நிலையத்தில் மறுசீரமைப்பு பணி: 1, 2வது நடைமேடை ஆகஸ்ட் முதல் வாரத்தில் திறக்க முடிவு



சென்னை, ஆக.02- தமிழகத்தில் முக்கிய ரயில் நிலையங்களில் ஒன்றான எழும்பூர் ரயில் நிலையத்தில், ரூ.734.91 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு பணி நடைபெறுகிறது. இங்கு பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம், வணிக வளாகம் அமைக்கும் பணி, பார்சல் அலுவலகக் கட்டிடப் பணி என பல்வேறு பணிகள் நடைபெறுகின்றன. இதுதவிர, ரயில் நிலையத்தில் 1வது நடைமேடை முதல் 11வது நடைமேடை வரை இணைக்கும் விதமாக, நடைமேம்பாலம் அமைப்பதற்காக ஆரம்பக் கட்டப் பணிகள் தொடங்கின.

இதற்காக, ரயில் நிலையத்தின் 1, 2வது, நடைமேடைகள் ஜூன் முதல் வாரத்தில் மூடப்பட்டன. இதைத் தொடர்ந்து, 3, 4வது நடைமேடைகள் மூடப்பட்டன. இதன் காரணமாக, சென்னை எழும்பூர் மதுரை இடையே இயக்கப்பட்ட தேஜஸ் விரைவு ரயில், மன்னார்குடிக்கு இயக்கப்பட்ட மன்னை விரைவு ரயில் உள்பட 6 ரயில்கள் தாம்பரம் நிலையத்துக்கு மாற்றப்பட்டன.

இதுதவிர, சென்னை எழும்பூர் புதுச்சேரி இடையே இயக்கப்பட்ட விரைவு ரயில் உள்பட சில ரயில்கள் கடற்கரை ரயில் நிலையத்துக்கு மாற்றப்பட்டன. இந்த ரயில்கள் அந்தந்த ரயில் நிலையங்களில் இருந்து தற்போது இயக்கப்படுகின்றன. இந்நிலையில், எழும்பூர் ரயில் நிலையத்தில் 1, 2வது நடை மேடை ஆகஸ்ட் முதல் வாரத்தில் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, சில ரயில்கள் இங்கிருந்து மீண்டும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து, தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: ரயில் நிலையத்தில் 1வது நடைமேடை முதல் 11வது நடைமேடை வரை இணைக்கும் விதமாக, நடைமேம்பாலம் அமைய உள்ளது. இவற்றில் ஒரு பகுதி பார்சலுக்காகவும், மற்றொரு பகுதி பயணிகளுக்காகவும் ஒதுக்கப்பட உள்ளது.

3 நடைமேடைகள் மூடல்? நடைமேம்பால அடித்தள பணிக்காக, 1 முதல் 4வது நடைமேடை வரை மூடப்பட்டு, அங்கு அடித்தளம் அமைக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு இடத்திலும் அடித்தளம் அமைக்க 2 மாதங்கள் ஆகும். அதன்படி, 1, 2வது நடைமேடைகளில் அடித்தளம் அமைக்கும் பணி ஆகஸ்ட் முதல் வாரத்தில் முடிந்துவிடும். தொடர்ந்து, 1, 2வது நடைமேடைகளை எங்களிடம் ஒப்பந்த நிறுவனம் ஒப்படைப்பார்கள்.

இதன் பிறகு, 2வது நடைமேடையில் இருந்து சென்னை மதுரை தேஜஸ் ரயிலையும், சென்னை புதுச்சேரி விரைவு ரயிலையும் இயக்க திட்டமிட்டு உள்ளோம். இதற்கிடையில், 5 முதல் 7 வது வரையிலான 3 நடைமேடைகளில் அடித்தளம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக, நடைமேடைகள் மூடுவது தொடர்பாக ஆலோசனை நடைபெற்று வருகிறது. இருப்பினும் இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கவினின் உடலை ஐந்து நாட்களுக்குப் பிறகு பெற்றுக் கொண்ட உறவினர்கள்







திருநெல்வேலி, ஆக.02- நெல்லையில் ஆணவக் கொலையான கவின் செல்வகணேஷ் உடல் அவரது தந்தை சந்திரசேகர், தம்பி பிரவீன் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஐந்து நாட்களுக்குப் பின்னர் கவினின் உடலை உறவினர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

முன்னதாக, அமைச்சர் கே.என்.நேரு நெல்லை மாவட்ட ஆட்சியர் சுகுமார் ஆகியோர் கவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். கவின் உடல் அவரது சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் கிராமத்துக்கு பலத்த போலீஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகமங்கலம் பகுதியைச் சேர்ந்த பட்டியலின சமூக இளைஞரான மென்பொருள் பொறியாளர் கவின் செல்வகணேஷ் கடந்த 27ம் தேதி திருநெல்வேலி கேடிசி நகரில் வைத்து வெட்டி படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தில் இவர் காதலித்ததாக கூறப்படும் பெண்ணின் சகோதரன் சுர்ஜித் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் சரணடைந்த நிலையில், சுர்ஜித் மற்றும் அவரது பெற்றோரான சரவணன் மற்றும் கிருஷ்ணகுமாரி ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து சுர்ஜித்தை பாளையங்கோட்டை போலீஸார் கைது செய்தனர். அவரது பெற்றோரான சிறப்பு காவல் படை உதவி ஆய்வாளர்கள் சரவணன், கிருஷ்ணகுமாரி ஆகிய இருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சுர்ஜித், குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், சுர்ஜித்தின் தந்தை எஸ்.ஐ. சரவணன், நெல்லை மாநகர போலீஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார். இருப்பினும், அவரது தாயையும் கைது செய்தால் மட்டுமே கவின் செல்வகணேஷின் உடலை வாங்குவோம் என உறவினர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்நிலையில், நெல்லையில் ஆணவக் கொலையான கவின் செல்வகணேஷ் உடல் அவரது தந்தை சந்திரசேகர், தம்பி பிரவீன் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஐந்து நாட்களுக்குப் பின்னர் கவினின் உடலை உறவினர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

முன்னதாக நேற்று, காதல் விவகாரத்தில் கொலை செய்யப்பட்ட ஐ.டி. ஊழியர் கவின் செல்வகணேஷ் பெற்றோர் மற்றும் குடும்பத்தினரை தூத்துக்குடி மக்களவை தொகுதி உறுப்பினர் கனிமொழி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் சந்தித்து ஆறுதல் கூறினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000